**தலைப்பு 16 – பாராளுமன்றம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பாராளுமன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூலை 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்றத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பவை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் மூலதன செலவின விடயமொன்றின் மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிராததுடன் 09 மூலதன செலவின விடயங்கள் மற்றும் மீண்டெழும் செலவின விடயங்கள் 13 இன் தேறிய நிதியேற்பாட்டின் 25 சதவீதம் முதல் 99.5 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | ஏற்றுக் கொள்கின்றேன். கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமையின் மத்தியில் எதிர்பார்த்தவாறு வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செலவினங்கள் ஏற்படாமையால் இந்நிலைமை ஏற்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகளை மேற்கொண்டு வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் கணனி அச்சீட்டு CA82 மற்றும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (iii) இன் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிராத மீளாய்வாண்டிற்குரிய ரூபா 18,968,618 ஆன பொறுப்புக்கள் 2022 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் நிதிப் பிரிவின் விபரங்களை கண்டறிய முடியாத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்குரிய பெறுமதிகள் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடங்கியிருக்கவில்லை. மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையை குறைத்துக் கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் உரிய மாதிரிகளில் சரியாக உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடுதல்**

**3.1.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டம் 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி திருத்தப்பட்டிருந்த போதிலும் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 20,954,882 ஆன 12 பணிகள் ஆண்டின் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஏப்ரல் 28 ஆந் திகதி பெறுகைகள் திட்டம் திருத்தப்பட்ட பின்னர் ரூபா 20,954,882 தொகையான 12 பணிகளை நடைமுறைப்படுத்த நேர்ந்திருந்ததுடன் அவற்றுள் 5 மில்லியனுக்கு மேற்பட்ட அளவு மேற்கொள்வதற்கு நேர்ந்தது மின்னல் தாக்குதல் மற்றும் மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறுகள் காரணமாக வளாகத்தில் | ஆண்டினுள் மேற்கொள்ளப்படும் பெறுகை நடவடிக்கைகள் அனைத்தும் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆதனங்களுக்கு ஏற்பட்ட நட்டங்களை மீளளிப்பு செய்வதற்காகும். இதற்கு மேலதிகமாக பல்வேறு அலுவலகங்களில் முன்னுரிமைத் தேவைப்பாடாக அலுவலக உபகரணங்களை பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்கள் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டதன் பின்னர் 12 பணிகள் நடைமுறைப்படுத்த நேர்ந்திருந்தது. | |

**3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 239,964,070 தொகையினுள் உள்ளடக்கப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 176,600,000 தொகையான 10 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 143,100,000 கிரய மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 08 பணிகள் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு மூடப்பட்டதன் காரணமாக நிறைவேற்ற முடியாதிருந்ததுடன் ரூபா 33,500,000 கிரயமான 02 பணிகள் விலைக்கேள்வி கிடைக்காமை மற்றும் மதிப்பீடு மாற்றமடைந்தமைக்கு காலம் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினால் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள பணிகள் ஆண்டினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 29,310,000 ஆன 04 பெறுகைப் பணிகள் ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் பணிகளை நிறைவு செய்வதற்கு இயலுமானதாக காணப்பட்டது 50 சதவீதத்தினை விடவும் குறைந்த அளவிலாகும். | நாட்டில் நிலவும் பொருளாதார சிக்கல்களின் நடுவே டொலரின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்த காரணத்தால் குறித்த வழங்குனர்களுக்கு பெறுகை நடவடிக்கையை மேற்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டமை மற்றும் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகம் மூடப்பட்டிருந்தமை போன்ற காரணங்களால் அப்பணிகளில் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தினை விட குறைவான அளவினை கொண்டிருந்தது. | பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள பணிகள் ஆண்டினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 கொண்ட நிதியமைச்சின் சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தியின் உப இலக்கம் 06 இன் பிரகாரம் நாளதுவரையாக பொருள் மெய்மையாய்வுப் பணிகளை மேற்கொண்டிராததுடன் இதுவரையிலும் அப்பணிகளை நிறைவு செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு இதுவரையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தாமதமின்றி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் பொருள் மெய்மையாய்வு பணிகளை நாளதுவரையாக மேற்கொண்டு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| JPA/D/PAR/FS/2020/01 ஆம் இலக்க மற்றும் 2021 யூலை 05 ஆந் திகதிய 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பாக்கப்பட்ட அறிக்கையின் 3.4 ஆம் பந்தியில் காண்பிக்கப்படும் ‘‘நிவாரண அடிப்படையிலான மோட்டார் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்கும் முன்மொழிவு முறைமை தொடர்பிலான 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைகள் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி மற்றும் வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு வெளியிடப்பட்டுள்ள TIP/SS/01/84 ஆம் இலக்க மற்றும் 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய கடிதத்திற்கு முரணாக சிரேஷ்ட மட்டத்திலான நிறைவேற்றுப் பதவியொன்றின் 6 வருடங்கள் சுழற்சி சேவைக் காலமொன்று இல்லாது பாராளுமன்ற பதவியணியின் 3 உத்தியோகத்தர்கள் நிவாரண அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குதல்’’ தொடர்பில் முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு இதுவரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் அறவீடுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பாராளுமன்றத்தில் குறித்த உத்தியோகத்தர்களுக்கு நிவாரண அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் நீண்டகாலமாக அமைச்சரவை அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அதற்கு முரணாக அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை மற்றும் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் இவ்விடயம் தொடர்பில் சுட்டிக்காண்பிக்கப்பட்டமையால் அதுவரையிலும் அந்த அடிப்படையில் நிறுவப்பட்ட சலுகை அடிப்படையிலான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. பொது திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தற்போது உள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளின் அடிப்படையில் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அந்த நிவாரணம் எதிர்காலத்தில் பாராளுமன்ற பதவியணிக்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் பொருத்தமற்றது என்பது வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தினால் 2022.02.14 ஆந் திகதி எழுத்துமூலம் கௌரவ சபை முதல்வருக்கும் எனக்கும் பிரதியொன்றுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அந்த அடிப்படையில் நிவாரணம் அடிப்படையிலான வாகன அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. | |

## 4. நல்லாளுகை

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் இடம்பெற வேண்டிய ஆகக்குறைந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கையையேனும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் ஆகக்கூடிய கணக்காய்வு குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டது. | ஆகக்குறைந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை யேனும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1082 மற்றும் உள்ளபடியான பதவியணி 927 ஆனமையால் 159 வெற்றிடங்கள் மற்றும் 04 மிகைகள் நிலவின. அதற்கமையஒட்டுமொத்த பதவியணியில் 14 சதவீத வெற்றிடங்கள நிலவின. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 159 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேண வேண்டியதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) அமைய / ஒப்பந்த அடிப்பயையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 08 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 12 ஆனமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி அமைய / ஒப்பந்த அடிப்படையில் 04 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வரவு செலவுத் திட்ட விவாதம் இடம்பெற்ற காலப்பகுதியினுள் பாராளுமன்ற பதவியணியின் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஓய்வுபெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்கள் நாளாந்த அடிப்படையில் சேவையில் மீள இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் ஓய்வுபெற்றுச் சென்ற மற்றுமொரு உத்தியோகத்தர் அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். மேற்படி உத்தியோகத்தர்களின் சேவை 2021.12.31 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |